www.tamilarangam.net

# புதுக்குரல்




அராஜகம் தோற்கும்,
புரட்சி வெல்லும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதுக்குரல்

மக்களிடமிருந்து தனிமைப்படுத்திய மிக மோசமான காரணமென்னவெளில், நம்மிடம் வரட்டுவாதம், அனுபவவாதம், ஆணையிடும் போக்கு, வால்பிடிக்கும் போக்கு, துதிபாடும் போக்கு, குறுங் குழுவாதம், அதிகாரவர்க்க மனோநிலை, அனைத்து வேலைகளிலும் உள்ள அராஜகம், ஆகியவைகள் இருந்ததே ஆகும். இத் தகையவைகள் மிக மிக மோசமானவையாகும். நமக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவையாகும்; பொறுத்து கொள்ள முடியாததாகும்.

— மாவோ



இப்பிரசுரம் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் சுற்றுக்கு விடப்பட்டுள்ளது.

The English and Sinhalish version of this document already in circulation.

## வரலாற்றுச் சக்கரங்கள் பின்னோக்கிச் சுழல்வதில்லை.

ஈழவிடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டுள்ள பல்வேறு சக்திகளும், விடுதலை அமைப்புகளில் இருந்து வெளியேறுகிற சக்திகளும் தமது நிலைப்பாடுகளை அறிக்கை வடிவிலும், நூல் வடிவிலும் வைத்துக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் இப் ''புதுக்குரலுக்கு'' உரிய நாங்கள் யார் என்பதை தெரியப்படுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

ஈழவிடுதலைப் போராட்டத்தில் முக்கிய அமைப்பாக கடந்த காலங்களில் கருதப்பட்டதும், தமிழ் ஈழதேசிய விடுதலை இயக்கங்கள் என்பதன் பெயரில் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐந்து இயக்கங்களில் ஒன்றானதுமான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து (PLOT) கழகத்தின் உச்சக்கட்ட அராஜகவாத தலைமைக்கு எதிராக கடந்த யூன் மாதம் வெளியேறிவர்கள் நாங்கள்.

நாம் வெளியேறியபோது எமது வெளியேற்றம் தொடர்பான தன்னிலை விளக்கத்தை த. ம. வி. கழகத்தின் தலைமை மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகளுக்கும் அனுப்பிவைத்திருந்தோம்.

வெளியேற்றத்திற்கான எமது தன்னிலை விளக்கத்தை இப்புதுக்குரலின் பின்னிணைப்பாக சேர்த்துள்ளோம்.

நாங்கள் வெளியேறியமைக்கான முக்கிய காரணங்கள்.

(அ) த. ம. வி. கழகத்தின் ஒவ்வொரு தோழனும் முதலில் மக்களின் விடுதலையை வேண்டி அல்ல, தனது தனி

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்கங்களுக்குள்ளும், இயக்கங்களுக்கிடையேயும் தோன்றிய முரண்பாடுகள் பகைமுரண்பாடுகளாக்கப்பட்டு விடுதலைப் போருக்கு உரம் சேர்க்க வேண்டிய எண்ணற்ற வீர இளைஞர்கள் அராஜக வாதத்திற்கு பலியாகினர். போராட்டத்திலிருந்து மக்கள் அன்னியமாகினர்.

இயக்கங்களுக்குள் தனிநபர் வழிபாடு வளர்க்கப்பட்டது. இயக்கத்திற்கு வெளியேயுள்ள ஆதிக்க சக்திகளே இயக்கத்திற்குள்ளும் தலைமை தாங்க முடியும் என்கிற நிலை ஏற்பட்டது. தலைமைக்கும் கீழ்மட்டத்துக்கும் இடையேயான உறவு முதலாளித்துவ கூலி இராணுவ தன்மையிலானதாகியது. பொருளாதாரம் பற்றிய திட்டமின்மையால் நிதி சேகரிப்பதற்கு தவறான வழிமுறைகளை சார்ந்திருக்கும் நிலை ஏற்பட்டது. நிதி நடவடிக்கைகளினால் ஏற்படும் பாதிப்பு என்பது ஆதிக்க சக்திகளுக்குத் தான் ஏற்பட வேண்டும். ஆனால், அடிப்படையில் மக்களையும் பாதிக்கும் வழிமுறைகள் மேற் கொள்ளப்பட்டன. துாள் கடத்துதல், சமூக விரோத செயல்களில் பெண்களை ஈடுபடுத்துதல் என்பதெல்லாம், நிதி ஒழுங்குக்கான நடவடிக்கை களாயின. விடுதலைப் போராட்டத்திற்கு தங்கள் இன்னுயிரை சிந்தும் தியாக நோக்குடன் வந்த எண்ணற்ற தோழர்கள் எதற்கும் உதவாத உதிரிகளாயினர். கலாச்சார சீரழிவிற்கு அடிமையாயினர். எதிர்காலத்தை இழந்தனர். சிவில் நிர்வாகம் சீரழிக்கப்பட்ட இடங்களில், ஒப்பான மாற்று நிர்வாகம் கட்டப்படாமையால் மக்களின் கஷ்டங்கள் மிகுந்தன.

குறைந்தபட்ச, மனித நேயமற்ற அப்பட்டமான பாசிசத்தன்மையுடைய இயக்கத் தலைமைகளின் நடவடிக்கைகளால், இயக்கங்கள் மக்களிடமிருந்து அன்னியமாயின. இயக்கங்களும் மக்களைச் சார்ந்திருப்பது பற்றி கவலையில்லாமல் மக்களை வெறும் பார்வையாளர்களாகவே வைத்திருந்தனர். புரட்சிகர சக்திகள் காட்டிக் கொடுக்கப்பட்டன. சர்வதேச புரட்சிகர சக்திகளுடனும், இந்திய புரட்சிகர சக்திகளுடனும் தொடர்புகள் தவிர்க்கப்பட்டன. தளத்திலும் பின்தளத்திலும் மேற் கொள்ளப்பட்ட அராஜக நடவடிக்கைகளின் விளைவாக எமது மக்களும் இந்திய மக்களும் ஈழ விடுதலைப் போராட்டத்தை சந்தேகக் கண் கொண்டு பார்க்க தொடங்கினர்.



## வெளியேறிய ஜனநாயக சக்திகளும், இடதுசாரி அமைப்புகளும்

இயக்கங்களின் அராஜகப் போக்குகளால் வெளியேறிய ஜனநாயக சக்திகள் மற்றும், இடது சாரி இயக்கங்கள் ஒரே சமயத்தில் ஸ்ரீலங்கா பேரினவாத அரசையும், ஆயுத, பலத்துடன் கூடிய அராஜக இயக்கங்களையும் பாசிச இந்திய அரசையும் எதிர் கொள்ள வேண்டியதாயிற்று. இவற்றின் விளைவாக அவர்கள் தளத்திலும், பின் தளத்திலும் அரை இரகசியத் தன்மையுடன் இயங்க வேண்டிய நிலைகளுக்கு உள்ளாயினர்.

இலங்கைத் தீவின் நெருக்கடியை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முயலும் சர்வதேச சக்திகளின் சதிச் செயல்களாலும், ஏகாதிபத்திய கலாச்சாரச் சீரழிவுகளும் அராஜக இயக்கங்களின் தாக்குதல் நடவடிக்கைகளும், வெளியேறிய ஜனநாயக சக்திளும், இடது சாரி அமைப்புகளும் வளர்ச்சி அடைவதைத் தடுத்தன. தத்துவார்த்த முரண்பாட்டின் அடிப்படையில், சில இயக்கங்கள் பிளவுறவும் நேர்ந்தன. இவற்றின் விளைவாக புதிய இளைஞர்களையும், அராஜக இயக்கங்களின் தன்மையை இனங்கண்டு மேலும் வெளிவந்து கொண்டிருக்கும் சக்திகளையும் இவை ஈர்ப்பதற்கு இயலாத ஆபத்தும் ஏற்பட்டுள்ளது.

இவை பற்றிய முழுமையான தரவுகள் கிடைக்காத இன்றைய சூழ்நிலையில் இவை பற்றிய முழுமையான விமர்சனத்தையும் இன்று முன் வைக்க இயலாது உள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனித அரசியல் உரிமையை வேண்டி கழக அராஜகத் தலைமைக்கு எதிராக முழுமையான உட்கட்சிப் போராட்டம் நடாத்துவது சாத்தியமற்றதாக இருந்த சூழ்நிலையில்—

(ஆ) அராஜக வாதத்துக்கு எதிரான மகாநாடு எனக்கூறிக் கொண்டு அராஜகத்தின் மறுநிர்மாணத்திற்காக அந்த அராஜகவாத தலைமையாலேயே நடாத்தப் படுகின்ற மகாநாட்டில் பங்குபெறுவது என்பது தலைமையின் நோக்கம் நிறைவேறுவதற்கே பயன்படும் என்ற சூழ் நிலையில்—

(இ) த. ம. வி. கழகத்தின் அராஜக தலைமையால் உட்கட்சி ஜனநாயகம் முற்று முழுதாக மறுக்கப்பட்ட நிலையில் கழகத்துக்குள் இருந்த ஜனநாயகவாதிகள் தொடர்ச்சியாக வெளியேறிக் கொண்டிருந்த கால கட்டத்தில் நாங்கள் தொடர்ந்து கழகத்துள் இருப்பது என்பது அராஜகவாத தலைமையை நியாப்படுத்துவதாகிவிடும் என்ற சூழ்நிலையில்—

நாங்கள் த. ம. வி. கழகத்தில் இருந்து வெளியேறினோம். அத்தகைய எமது நிலைப்பாடுகள் இன்று நிருபணமாகி விட்டதைக் காணக் கூடியதாகவுள்ளது. ஒன்றை நாங்கள் மீண்டும் உறுதி செய்ய விரும்புகிறோம். நாங்கள் த. ம. வி. கழகத்திலிருந்துதான் வெளியேறினோமே தவிர ஈழவிடுதலைப் போராட்டத்திலிருந்து வெளியேறவில்லை. எமது வெளியேற்றம் என்பது அடிப்படையில் அராஜகத்துக்கு எதிரானதாக இருக்கின்ற அதே நேரத்தில், ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு வலுவானதுமாகும்.

**ஈழவிடுதலைப் போராட்டத்தின் இன்றைய நிலை**

தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமானது இதனை முன்னெடுத்து செல்கின்ற சக்திகளின் அரசியல் தெளிவற்ற சுத்த இராணுவக் கண்ணோட்டத்துடன் கூடிய



அராஜக நடவடிக்கைகளினால் ஒரு தேக்கத்தையும், அச்சம் மிகுந்த நெருக்கடியான சூழ் நிலையையும் அடைந்துள்ளது.

ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் கொடுமையான ஒடுக்கு முறைகளினாலும், பெருந்தமிழ் முதலாளிய தலைமையின் சந்தர்ப்பவாத தன்மையினாலும், தமிழ் பேசும் மக்கள் பாராளுமன்றத்தலைமைகளை நிராகரித்து ஆயுதமேந்திய போராட்டத்தினை ஆதரித்தனர். ஆனால் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பலம் வாய்ந்த இயக்கங்களாக கருதப்பட்டதும் இந்திய அரசால் பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதுமான ஐந்து விடுதலை இயக்கங்களும், ஏனைய சுத்த இராணுவக் குழுக்களும் சரியான தத்துவார்த்த அரசியல் கண்ணோட்டமும், பாட்டாளிவர்க்க தலைமையையும் கொண்டிராததால் போராட்டத்தை சரியாக முன்னெடுத்து செல்லவில்லை.

ஜனநாயக மத்தியத்துடன் கூடிய வழி காட்டும் கட்சி பற்றிய தெளிவின்மை, ஸ்ரீலங்கா அரசின், வர்க்கத் தன்மை, சமூக உருவாக்கம், அமெரிக்க ஏகாதிபத்தியம் பாசிச இந்திய அரசு ஆகியவைபற்றிய சரியான கண்ணோட்டமின்மை ஏகாதிபத்திய பிடிக்குள் இயங்கும் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக நடைமுறைப்படுத்த வேண்டிய புதிய ஜனநாயக புரட்சிக்கும், தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் உள்ள தொடர்பைபற்றிய தெளிவின்மை, ஆயுத நடவடிக்கைகளில் நீண்டகாலமக்கள் யுத்தம் பற்றிய தெளிவான கண்ணோட்டம் இன்மை. ஆகியவற்றை இவ்வியக்கங்களின் முக்கிய குறைபாடுகளாக கொள்ளலாம். இவற்றின் விளைவாக ''ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமே சுய நிர்ணய உரிமைப் போராட்டம்'' என்பதை மறந்து விடுதலை இயக்கங்கள் ஏகாதிபத்தியங்களையும், இந்திய விஸ்தரிப்பையும் சார்ந்து நிற்கவேண்டியதாயிற்று. போராட்டத்தில் தேக்கம் ஏற்பட்டது. மக்கள் பேரழிவிற்கு உள்ளாகினர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தென்னிலங்கை இடது சாரிகளின் நிலை:**

மார்சிச—லெனினிச கோட்பாட்டின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட தென்னிலங்கை இடதுசாரிக் கட்சிகள் இன்று சமரச,தயக்க திருத்தல்வாத நடைமுறைகளினூடாக பாராளுமன்ற பாதையை நியாயப் படுத்தும் கட்சிகளாக சீரழிந்து உள்ளன. தேசிய இனப் பிரச்சனையில் சரியான மார்சிச லெனினிச தத்துவப் பார்வை இல்லாத இக்கட்சிகள் நடைமுறைசாராத, கற்பனாவாத அடிப்படையிலான வரட்டுத் தனமான பாட்டாளி வர்க்கப் புரட்சி, ஐக்கிய இலங்கை போன்ற கோசங்களை முன்வைத்து இன்று செயலிழந்து, பலமிழந்து நிற்கின்றனர்.

ஒரு கம்யூனிச கட்சிக்கு இருக்க வேண்டிய ஜனநாயக மத்தியத்துவமில்லாமல் அரசியல் அராஜக நடவடிக்கைகள் மிகுந்த கட்சிகளாக ஆனதன் விளைவாக ஆரோக்கியமான உட்கட்சிப் போராட்டம் அனுமதிக்கப்படாமல் இவை சிதறுண்டும் பேரயின. தேசீய இனப்பிரச்சினையில் சரியான மார்சிச—லெனினிச கோட்பாட்டை இவர்கள்கைக் கொள்ளாததன் விளைவாக பகை முரண்பாட்டை நேச முரண்பாடாக காட்டினார்கள். இன முரண்பாட்டை நீக்குவதற்கு பதிலாக கூர்மையடைவதற்கான செயற்பாடுகளில் துணைபோய் இனவாதப் போக்கிற்கு பலியாகினர். அரச பயங்கர வாதத்தை நியாயப் படுத்தும் அளவிற்கு சீரழிந்தனர். லங்கா சம சமாஜக் கட்சியின் கொல்வின் ஆர். டி. சில்வா ''நாட்டைப்பிரிப்பதன் மூலம் கஸ்ரப்பட்டு நாம் பெற்ற சுதந்திரத்தை இழந்து விடுவோம்'' என்றும், மக்கள் விடுதலை முன்னணியின் ரோகண விஜயவீரா, ''நாட்டைப் பிரிக்கும் நடவடிக்கைகளை தோற்கடிப்பதற்காக உயிர் மேல் ஆணையிட்டு உறுதி பகர்கிறேன்'' என்றும், நவ சம சமாஜக் கட்சியின் விக்கிரமபாகு கருணாரத்தின ''நாம் நாட்டைப் பிரிப்பதற்கான திட்டங்கள் தீட்டுபவர்கள் அல்ல. ஐக்கியத்திற்காக தோன்றியுள்ள ஒரே ஒரு அமைப்பு நாமே''



என்றும், இலங்கை கம்யூனிச கட்சியின் பீற்றர் கனமன், ''சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கிறோம். ஆனால் பிரித்து செல்வதை எதிர்க்கிறோம்'' என்று குழப்பியும் தங்களின் பேரினவாத சார்பு நிலையை வெளிப்படுத்தி மார்சிச—லெனினிசத்திற்கு துரோகம் இழைத்தனர்.

தரகுமுதலாளித்துவ கட்சிகளும், அரசுகளும் பாட்டாளிவர்க்க விடுதலையையோ, தேசிய இன விடுதலையையோ, எப்பொழுதும் அங்கீகரிப்பதில்லை. மாறாக, அடக்கி, நசுக்கிடும் முயற்சிகளில் தான் ஈடுபடுவார்கள். மேற்குறிப்பிட்டவர்களும் இடது சாரி முகமூடிகள் தரித்த ஸ்ரீலங்கா மக்கள்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளும் தரகு முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கு துணை போகின்றனர்.

ஆயினும், இன்று தெற்கில் நம்பிக்கை கீற்றுக்கள் ஒளிவிசத் தொடங்கியுள்ளன. அரசியல் தத்துவ வறுமை காரணமாக புரட்சிப் போக்கை மழுங்கடித்த அமைப்புக்களில் கடந்த காலங்களில் நடைபெற்ற வாதங்கள் ஆய்வுகளின் ஊடாக பிரிந்துவந்து வளர்ந்தவர்களும் பிரச்சனைகளை ஆய்ந்து தன்னிச்சையாக அமைப்புக்களை ஏற்படுத்தியவர்களுமே இந்த நம்பிக்கை கீற்றுக்கு காரணமாகின்றனர். இவர்கள் தேசிய விடுதலை தொடர்பாகவும், வர்க்க விடுதலை தொடர்பாகவும் கொண்டுள்ள வேலைத் திட்டங்களுடன் நமக்கு முரண்பாடுகளைக் காட்டிலும் வேறுபாடுகளே உள்ளன. நேச சக்திகளாக செயல்பட்டு விமர்சன, சுயவிமர்சன அடிப்படையில் வேறுபாடுகள் தீர்க்கப்பட்டு வேலைத் திட்டங்கள் ஏற்படுத்துவதன் மூலம் புரட்சியின் விரைவான சாத்தியம் பற்றிய நம்பிக்கை நமக்கு உதிக்கின்றது

**ஸ்ரீலங்கா அரசின் நிலை**

ஈழப் போராட்டம் தேக்கம் கண்டுள்ள இன்றைய சூழலில் அதனை நசுக்குவதற்கு ஸ்ரீலங்கா பேரினவாத அரசு பின்வரும் வழிமுறைகளைக் கையாளுகிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(அ) சிங்களவர்கள், தமிழர்கள், மலையகமக்கள், முஸ்லிம் மக்கள் ஆகியோரிடையே இனவாதத்தை வளர்த்தல்.

(ஆ) தவறான பிரச்சாரம், போலி இயக்கங்களை உருவாக்குதல், உளவாளிகளை ஊடுருவவிடுதல், இயக்கங்களின் அராஜக போக்கை சாதகமாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக போராளிகளிடையே பகைமுரண்பாட்டை அதிகப்படுத்துதல்.

(இ) போராட்டப்பகுதிகளில் அத்தியாவசிய பொருள் வினியோகத்தை கட்டுப் படுத்துதல், திறந்த பொருளாதாரம் மூலமாக அன்னியப் பொருட்களை இறக்குமதி செய்தல், வெளிநாட்டுக் கம்பனிகளின் முதலீட்டை அதிகப் படுத்துதல், ஆடம்பரப் பொருட்களை இறக்குமதி செய்தல் போன்ற பொருளாதார சீரழிவு நடவடிக்கைகள் மூலம் போராட்டத்தை ஒடுக்குதல்.

(ஈ) கலாச்சார சீரழிவு நடவடிக்கைகள் மூலம் பாட்டாளி வர்க்க உணர்வைப் மழுங்கடித்தல்:.

(உ) சமரசப் பேச்சுவார்த்தை மூலமாக சந்தர்ப்பவாத தலைமைகளை உருவாக்கி போக்குணமிக்க தலைமைகளையும், புரட்சிகர சக்திகளையும் மழுங்கடித்தல்.

## இந்திய அரசின் பங்கு

அரைக் காலனித்துவ, அரை நிலப்பிரபுத்துவ இந்திய அரசு தனது நாட்டுத் தேசிய இனங்களை ஒடுக்குவதில் அப்பட்டமான பாசிசத்தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. தனது நாட்டு தேசிய இனங்களை ஒடுக்கும் ஒரு அரசு இன்னொரு நாட்டின் தேசிய இன விடுதலையை முழுமையாக ஆதரித்து விடாது. சோவியத் சார்புடன் செயற்படும் இந்திய அரசு அண்டையிலுள்ள சிறு நாடுகளை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயலுவதை வரலாறு நமக்கு உணர்த்தி உள்ளது.



போதிய ஆய்வுகளும் அரசியற்பார்வையும் இன்றி தன்னை சார்ந்து நிற்க நேர்ந்த விடுதலை இயக்கங்களை இராணுவரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் கட்டுப்படுத்தி உள்முரண்பாடுகளை வளர்த்து, உட்பிரிவினைகளை ஊக்குவித்து, மோதவிட்டு அராஜக இய்க்கங்களை முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் இன்று இந்திய அரசு வைத்துள்ளது. இன்னொரு பக்கம் தனது கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் விடுதலை இயக்கங்கள் மூலமாக நெருக்கடி ஏற்படுத்தி அமெரிக்க சார்பு ஸ்ரீலங்கா அரசையும் கட்டுப்படுத்த முனைகிறது! அதேவேளை இலங்கை அகதிகளைப் பயன்படுத்தி தனது பாசிசத் தலைமைக்கு சர்வதேசரீதியாக அனுதாபத்தை ஏற்படுத்தி சமாதானப் புறாவாக உலகுக்கும் காட்டிக் கொள்கிறது. ஸ்ரீலங்கா பேரின வாத அரசின் இன அழிப்பு நடவடிக்கைகளில் இருந்து தமிழ் மக்களை பாதுகாக்கத்தவறிய இந்திய அரசு அடிப்படைப் பிரச்சனைக்கான தீர்வினைக் காண முற்படாமல் சமரசப் பேசுவார்த்தைகள் மூலமும், சமரசத் தீர்வு மூலமும் அண்டைநாடான இலங்கைத் தீவை தனது அரசியல், பொருளாதாரக்கட்டுப்பாட்டுள் கொண்டுவர முனைகிறது.

## சமரசப் பேச்சுவார்த்தை

இன்றைய நெருக்கடிக்குள்ளாக்கப்பட்ட குழப்ப நிலையின் கொதிப்பை தவிர்ப்பதற்கும், எரிமலை போல் குமுறும் ஈழமக்களின் உணர்வுகளை மழுங்கடிப் பதற்கும், பெருகி வரும் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கும் சர்வதேச ரீதியாக கடன் வாங்குவதற்கும், புரட்சிகர சக்திகளை வேரோடு களைந்து சமரசத்தலைமையை நிலைப்படுத்துவதற்கும் இன்று பேரினவாத அரசிற்கு ஓர் சமரசப் பேச்சுவார்த்தை தேவைப்படுகிறது. இலங்கை அரசை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கும் அண்டை நாட்டில் ஒரு புரட்சி உருவாவதை தடுப்பதற்கும், இந்திய அரசிற்கும் இன்று ஒரு சமரசப்பேச்சு வார்த்தை தேவைப்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுகின்றது. சர்வதேச ஏகாதிபத்திய நலன்களுக்கும் இந்த சமரசப் பேச்சு உகந்ததாகவே இருக்கின்றது. குறைந்த பட்ச மனிதாபிமானமற்ற பாசிசத்தன்மையான சுத்த இராணுவக்கண்ணோட்டத்துடன் கூடிய மக்களை சாராத, அராஜகவாத இயக்கங்களின் நடவடிக்கைகளாலும் அன்றாட வாழ்நிலைப் பிரச்சனைக்கு முகம் கொடுக்க வேண்டிய அவசியத்தாலும், சலிப்புற்று சோர்வடைந்திருக்கும் ஈழமக்கள் அராஜகத்துக்கு எதிரான போராட்டத்தை தீவிரபடுத்த வேண்டும் எனும் குணாம்சத்தை வெளிப்படுத்தும் அதேவேளையில் எதிரியின் சமரசத்தை ஏற்றுக் கொள்ளும் மனோநிலையிலும் உள்ளனர்.

இந்தச்சூழலில் இங்கே திணிக்கப்படப் போகின்ற ''தீர்வு'' என்பது மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்ட ஒரு அரச அமைப்பே ஆகும். இது அடிப்படைப் பிரச்சனைகளை எந்த விதத்திலும் தீர்க்கப் போவதில்லை. மேலும், மேலும் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்த பொருளாதார அமைப்பு இங்கு வளரப்போகின்றது. இதில் பாதிக்கப்படப் போகின்றவர்கள் போராளிகளும், அப்பாவிப் பொது மக்களுக்மே ஆவர். ''தீர்வு'' திணிக்கப்படும் போது இயக்கங்களுக்குள் பல்வேறு குழப்பங்கள் ஏற்படப்போவது உறுதி. பேரினவாத அரசிற்கு உட்பட்ட மாகாண அமைப்பிற்குள் தமிழ் ஆதிக்க சக்திகளால் தலைமைதாங்கப்பட்ட மாகாண அரசிற்குள் ஓயாது போரிட்டு, தம்மைத் தாமே அழித்துக் கொள்ளும் ஆயுதக்குழுக்களாக பல இயக்கங்கள் சீரழியும் ஆபத்தும் உள்ளது.

### இந்தச் சூழலில் நாங்கள்

இந்தச் சூழலில் நாங்கள் ஒரு அராஜகவாத இயக்கத்திலிருந்து வெளியேறி ஈழப் போராடத்துக்குள் நின்று எங்கள் ''புதுக்குரலை'' ஒலிக்கிறோம். ஈழமக்களின் சுயநிர்ணய உரிமையை பெற்றுத் தரும், ஒரு சரியான புரட்சியை வழி நடத்தும், அரசியல் கட்சியையும், இராணுவத்தையும் உருவாக்க வேண்டிய இன்றைய சூழலில்



அத்தமகத்தான பணியில் எங்கள் பங்களிப்பைச் செய்வதை உடனடிப்பணியாகக் கொண்டு நிற்கின்றோம். நாங்கள் ஈழவிடுதலைப் போராட்டத்தில் இலங்கையின் அரசியல் சூழ்நிலைபற்றியும் சரியான கண்ணோட்டத்தை அடைந்துவிட்டோம் என உரிமை கொண்டாடவில்லை. ஆயினும், பொருளாதார அமைப்பு பற்றியும், சர்வதேச அரசியய் இவைபற்றிய எல்லாவிதமான கருத்துக்களையும் திறந்த மனத்துடன் ஏற்றுக் கொண்டு அவற்றினை முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தி ஈழவிடுதலைப் போராட்டம் பற்றிய தெளிவான முடிவை நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கிறோம். மேற்குறிப்பிட்ட ஆய்வுகளுக்கு நாங்கள் மார்சிச லெனினிய ஆய்வு முறையை பின்பற்றுகிறோம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆனால், இதுவரை எல்லா இய்க்கங்களுமே மார்சிச-லெனினிய முழக்கங்களை முன்வைத்து மக்களை ஏமாற்றி வந்துள்ளதையும் நாம்தெளிவாக இனங்கண்டிருக்கிறோம். இந்த இயக்கங்கள் எதுவும் இதுவரை இலங்கையின் அரசியல் பொருளாதார அமைப்பு பற்றியும், நடைமுறைப் படுத்த வேண்டிய புரட்சியின் வடிவம் பற்றியும், போர்த் திட்டம், செயற்திட்டம் பற்றியும் தெளிவான கருத்துக்கள் எதையும் முன்வைக்கவில்லை. இதுவே இவர்கள் மார்சிசத்தின் பெயரால் மக்களை ஏமாற்றியவர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகும். எனவே, எங்களுடைய முதல்பணியாக மேற்குறிப்பிட்டவற்றை மேற்கொண்டுள்ளோம். இதன் பொருள் நாங்கள் ஈழவிடுதலைப் போராட்டத்தின் உடனடியான நடடிக்கைகளை ஒதுக்கிவைத்துவிட்டு வெறும் ஆய்வும்பணிகளையே உடனடி கடமையாக மேற்கொண்டிருக்கின்றோம் என்பதல்ல. நாம் மேற் கொள்ளும் ஆய்வுகள் என்பதே ஈழவிடுதலைப் போராட்டத்தை சரியாக மேற்கொள்ளல் என்பதன் ஓர் அம்சம் தான்.

ஏனைய இடதுசாரிசக்திகள், ஜனநாயக குழுக்கள் தென்னிலங்கை புரட்சிகர சக்திகள் ஆகியவற்றுடன் ஒட்டுறவற்ற தனிப்பட்ட ஓர் இறுகிய இயக்கமல்ல நாங்கள். இதர

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜனநாயக சக்திகளுடனும், இடதுசாரி இயக்கங்களுடனும் நாங்கள் வேறுபடுகின்ற விடயங்களில் விமர்சனபூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தி வேறுபாடுகளை குறைத்துக் கொள்ளவும், ஒன்று படும் விடயங்களில் ஐக்கிய நடவடிக்கைகளுக்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஒரு சரியான புரட்சிகர அமைப்பை நோக்கிய செயற்பாடுகளில் தனித்துவததுடன். எங்கள் பங்கை ஆற்ற தயாராக இருக்கிறோம் என்பதனை உறுதியாக கூறுகிறோம்.

ஈழவிடுதலைப் போராட்டத்தில் இன்று ஒரு தேக்கம் ஏற்பட்டிருந்தாலும், மக்கள் சோர்வடைந்திருந்தாலும் அவர்கள் இன்றும் ஈழவிடுதலையில் நம்பிக்கை இழந்து விடவில்லை. பிரிந்துவந்த ஜன நாயக சக்திகளும் இடதுசாரி இயக்கங்களும் ஓர் ஐக்கியத்துக்குள் ஒருமைப்படுவதன் மூலம் இந்த நம்பிக்கையை வளர்க்கமுடியும். இதன் அடிப்படையில் ஈழவிடுதலைப் போராட்டத்துக்காக முன்னின்று செயற்படும் நாங்கள் ஈழவிடுலைப் போராட்டத்தில் இன்று ஏற்பட்டிருக்கும் தேக்க நிலை காரணமாகவும், விடுதலை அமைப்புக்களுக்குள் மேலோங்கிய அராஜக நிலை காரணமாகவும். ஈழ விடுதலை அமைப்புக்களிலிருந்து வெளியேறிவருகிற தோழர்கள்; அடுத்த கட்டமாக நமது போராட்ட நிலமைகளை நிர்ணயிக்கக் கூடிய, சரியான தளத்தை உருவாக்க முனையும் எங்கள் முயற்சியில் ஒன்றிணையும்படி இதன் மூலம் அறைகூவல் விடுகின்றோம்.

தோழர்களே!

வரலாற்று சக்கரங்கள் பின் நோக்கி சுழல்வதில்லை. ஒன்று படுவோம். ஐக்கியப்படுவேம். ஒரு சரியான புரட்சிகர கட்சியை அமைப்போம். ஆயுதம் ஏந்துவோம். ஈழப்புரட்சியை வென்றெடுப்போம்.

தமிழீழ மக்மள் விடுதலைக் கழகத்திலுருந்து
(PLOT) வெளியேறி புதுக்குரல் எழுப்பும்
தோழர்கள்

1986-08-11



## எமது வெளியேற்றம் அராஜகத்திற்கு எதிரானதே தவிர விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானதல்ல.

.........அவர்களின் முழுமையான உடன் கவனத்திற்கு.

தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து (PLOT) வெளியேறிய தோழர்கள் எழுதிக்கொள்வது.

சிறீலங்கா பேரினவாத அரசு தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மறுத்த பொழுது, தமிழ் மக்கள் தமது தன்னியல்பான உரிமை மறுப்பிற்கு எதிரான போராட்டத்தை அரசுக்குள்ளேயே இருந்து கொண்டு நடத்தினர். அரசிற்குள்ளேயே அரசின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தமிழர்கள் நடத்திய அத்தகைய போராட்டங்களைக் கூட அரசு தனது, அரசு இயந்திரங்களைக் கொண்டு நியாயமான போராட்டங்களை கடுமையாக அடக்கி ஒடுக்கியது. இந்நிலையில்தான் தமிழ் மக்கள் தமது மறுக்கப்பட்ட அரசியல் உரிமைகளையும், நியாயமான உரிமை மறுப்பிற்கு எதிரான போராட்டங்களையும், ஆளும் வர்க்கம் அடக்கி ஒடுக்குவதைக் கண்டு' ''தமிழ் மக்களின்'' தமது அடிப்படை அரசியல் உரிமைகளை ஆளும் வர்க்கத்திடமிருந்து, ஆயுதத்தினூடாகத் தான் பெறமுடியும் என்ற நிலை வளர்ச்சிக்கு வந்தனர். இதனடிப்படையில்தான், ஆயுதம் ஏந்திய போராட்டத்தினூடாக, தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்கும் நோக்குடன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) கட்டப்பட்டது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலுள்ள ஒவ்வொரு தோழனும், முழுமையான அரசியல் சுதந்திரத்துடன், பொது எதிரிக்கெதிரான போராட்டத்தை, முழுமையான தியாக மனப்பான்மையுடன், முன்னோக்கி, முன்னெடுத்-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துச் செல்ல வேண்டிய இக்காலக்கட்டத்தில், ஆனால் இன்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலுள்ள தோழர்கள் தமது தனிமனித அரசியல் உரிமைகள் கூட கழக அராஜக வாதத் தலைமையினால் அடக்கப்பட்ட நிலையில்,

ஒவ்வொரு தோழனும்

★ மக்களின் விடுதலையை வேண்டிஅல்ல,

★ தமது தனிமனித அரசியல் உரிமையை வேண்டி, அராஜக வாதத்தின் முன் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறான். [இங்கு தனிமனிதர் அணு அணுவாகச் சாவது என்பதன் பொருள் ''தனி மனிதனுக்கான அரசியல் உரிமைகளை, தனி மனிதன் அஜராகத்தினால் படிப்படியாக இழந்து செல்கிறான் என்பதே ஆகும்'']

பேச்சுரிமை, எழுத்துரிமை, கல்வியுரிமை, வேலை வாய்ப்பு உரிமை போன்ற எமது அடிப்படை அரசியல் உரிமைகளை இழந்த நிலையில், அதனை வேண்டிப் போராடப் புறப்பட்ட நாம் இன்றும் கழகத்துக்குள் வந்தும் மூன்று வருடமாகியும், இழந்த அரசியல் உரிமைகளை ஒரு பரிமான வளர்ச்சியிலேனும் வென்றெடுக்கவில்லை என்கின்ற அதே வேளையில் நாம் கழகத்துக்குள் வருகின்ற பொழுது எமக்கிருந்த ஓரளவு அரசியல் உரிமைகளையும் கழகத்தின் இந்த அராஜகவாதத் தலைமை படிப்படியாக நசுக்கி, எங்களை இன்று வெறும் நடைப் பிணங்களாக பார்க்கத் தொடங்கியதில் இருந்து, பாவிக்கத் தொடங்கிவிட்ட இவ்வேளையில் இனியும் நாம் எமது அடிப்படை அரசியல் உரிமைகளைப் பெற, எமதுயிரையும் பணயம் வைத்துப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். எனவே, உச்சக் கட்ட அராஜகத்துக்குள் இருந்து [கொண்டு, அராஜகத்திற்கு எதிரான முழுமையான போராட்டத்தை நடத்துவது என்பது சாத்தியமற்றது.



''இந்நிலையில் எமது வெளியேற்றம் தவிர்க்க முடியாததாகின்றது''

குறிப்பாகப் பார்க்கும் பொழுது பிற்போக்கான குழு நலன்களுக்காக ''தன்னை மக்களுக்காக போராடுவதாகக்' கூறிக் கொண்டு தன்னின மக்களையே அழித்துக் கொண்டிருப்பது தான் இந்தக் கழக அராஜக வாதத் தலைமையாகும்.

நடைபெற இருக்கும் மகாநடு ஒரு ஜனநாயக பூர்வமான சூழலில் நடத்தப் பெற்று, அராஜகத்துக்கு எதிரான பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்கிற நம்பிக்கையை தகர்கின்ற சூழலையே நாம் இங்கு காணக் கூடியதாக இருக்கின்றது. அராஜக வாதிகளே இம் மகாநாட்டின் மூலம், தங்களை மறுநிர்மானம் செய்து கொள்ளப் போகின்றார்கள். இச் சூழலில் எங்கள் கருத்துக்களை வெளியிட வேண்டும். அதாவது, இந்த மகாநாட்டில் நாம் பங்கு கொள்வது என்பது அராஜகத்தின் மறு நிர்மாணத்திற்கே பயன்படும் என்கிற வகையில் மகாநாட்டுக்கு முன்னதாகவே, ''எங்கள் வெளியேற்றம் தவிர்க்க முடியாததாகிறது''

கழகத்தின் இந்த அராஜகவாதத் தலைமையின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் சிறீலங்கா பேரினவாத அரசின் சதி நடவடிக்கைகளிலிருந்து பிரித்துப் பார்க்கக் கூடிய தொன்றல்ல என்பது உண்மை.

PLOT இல் இருந்து வெளியேறிய தோழர்களாகிய நாங்கள், இந்த அராஜக வாதத் தலைமையின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் ஆரம்பத்திலிருந்து எமது எதிர்ப்பை சில சமயங்களில் வெளிப்படையாகவும், சில காலங்களில் தந்திரோபாயம் கருதியும் மிகவும் சூசகமாகவும் வெளிப்படுத்தி வந்துள்ளோம். அவ்வாறிருந்தும் பல சந்தர்ப்பங்களில் நாம் அராஜக வாதத்தின் கருத்தியல்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களால் நசுக்கப்பட்டும், கரங்களால் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகியும் உள்ளோம் என்பது, நீங்கள் புரியாத ஒன்றாக இருந்தாலும், அறியாத ஒன்றல்ல.

நாம் கடுமையான போராட்டத்திற்கும், கழக அராஜகத்துக்கும் மத்தியிலும், கழகத்துக்குள் இருந்து கொண்டு நல்ல சக்திகளை ஒன்றிணைத்து, அராஜகத்திற்கெதிரான குரல்களை வெறும் வாயளவில் அல்லாமல் நடைமுறையில் முன்னுக்கு கொண்டு வந்து கழகத்தை நல்ல பாதைக்குக் கொண்டு செல்வதில், எமது பங்களிப்பைச் செய்ய விரும்பினோம்.

ஆனால் கழகத்துக்குள் மருந்துக்குக் கூட (சிறிதளவேனும் கூட) உட்கட்சி ஜனநாயகம் என்பது மறுக்கப்பட்டு இருந்ததனால் கழகத்துக்குள்ளிருந்த ஜனநாயக வாதிகள் கூட உதிரிகளாக தொடர்ந்தும் வெளியேறிக் கொண்டிருக்கும் இந்நிலையில் கழகத்துக்குள் (அமைப்பு) தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டம் பற்றி சரியான கருத்தைக் கூற முடியாவிட்டாலும்,

★ பெருமளவில் வெளியேறிவிட்ட வெளியேறிக் கொண்டிருக்கும் ஜனநாயக சக்திகளின் பார்வைக்கும்

★ கழகத்துக்கு வெளியில் இருந்து கொண்டும் அராஜகத்திற்கு எதிராக, தொடர்ச்சியாக குரல்களை எழுப்பிக் கொண்டிருக்கும் அராஜகத்திற்குகெதிரான சக்திகளின் பார்வைக்கும்,

★ எமது வெளியேற்றத்தினை எதிர்பார்த்து, உள்ளுக்குள் வெளியேறத் துடிக்கும் (வெளிப்பட்ட சக்திகள், வெளிப்படாத சக்திகள் இரண்டும்) சக்திகளின் பார்வைக்கும்,

எமது வெளியேற்றம் என்பது அத்தியாவசியமாகின்றது. இதன் பார்வையில், இந்த நிலையில், ''எமது



வெளியேற்றம் தவிர்க்க முடியாததாகின்றது.'' எனவே எமது நியாயமான வெளியேற்றத்திற்கு நீங்கள் எந்தப் பக்கம்?

மேற்காட்டியதிலிருந்து நீங்கள் கண்டு கொள்ளவேண்டியது PLOT இல் இருந்து வெளியேறிய தோழர்களாகிய நாங்கள் எந்தவித தனிமனித முரண்பாடுகளுக்காகவோ அல்லது அரசியல் அணுகுமுறையற்ற எந்தவித முரண்பாடுகளுக்காகவோ வெளியேறவில்லை என்பதே ஆகும்.

எமது வெளியேற்றத்தின் அடிப்படை என்பதே,

★ அராஜகத்திற்கெதிரானது

★ அராஜகத் தலைமைக்கெதிரானது

★ அரசியல் அராஜகத்திற்கெதிரானது.

★ எமது வெளியேற்றம் ஒருஆழ்ந்த அரசியல்போக்குள்ளதாக இல்லாவிட்டாலும் நிச்சயமாக ஓர் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது உண்மை.

★ இறுதியாக நாங்கள் எமது வெளியேற்றத்தின் பின் அடுத்தக் கட்ட நடவடிக்கைகளைப் பற்றி சரியாக தீர்மானிக்காவிட்டாலும் எமது அடுத்தக் கட்ட வேலைகளை தீர்மானிப்பதற்கு முதன்மை வகிக்கக் கூடிய சக்திகளை சரியாக எம்மால் இனங்காண முடிகின்றது.

(அ) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்கு உள்ளேயுள்ள நல்ல சக்திகள் (அகச்சூழல்)

(ஆ) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திற்கு வெளியேயுள்ள நல்ல சக்திகள் (புறச்சூழல்)

★ கொள்கை விடுதலை,

★ தோழர்கள் விடுதலை,

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



★ அமைப்பு விடுதலை,

★ இவை மூன்றும் சரியான ஒரு நிலையை விஞ்ஞான பூர்வமாக பெற்றிருக்கின்ற போதுதான் மக்கள் விடுதலைஎன்பது சாத்தியமாகும்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்